## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.65/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : கணேச ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**28.08.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தில் A அட்டவணை சொத்திற்கு அளவுகள் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் A அட்டவணை சொத்து எந்த புல எண்ணில் வருகிறது என்பதை பிராதில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. சொல்லவில்லை. பிராது தயார் செய்யும்போது எனது வழக்கறிஞரிடம் வழக்கு A அட்டவணை சொத்திற்கு புல எண் அளவுகளை சொன்னேனா என்றால் நான் ஒரு தாளில் எழுதி வந்து கொடுத்தேன். வழக்கு A அட்டவணை சொத்து பட்டா எண் குறிப்பிட்டிருப்பதில் தனம்மாளுக்கு சொந்தமானது என்பதை காட்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு எந்த பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கு சொத்து குறித்து தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வழக்கு B அட்டவணை சொத்து A அட்டவணை சொத்தின் ஒரு பகுதி என சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கு B அட்டவணை சொத்து A அட்டவணை சொத்தின் ஒரு பகுதி என நான் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் A அட்டவணை சொத்து எனது மாமியார் பெயரில் உள்ளது. B அட்டவணை நேசம்மாள் பெயரில் உள்ளது. அவர்கள் இருவரும் அக்கா தங்கைகள் ஆவார்கள். என் மனைவி மற்றும் அவரது சகோதரிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம்

தெரியுமா என்றால் தெரியும். சுப்பிரமணியம், வாசு, சிவகுமார், வடிவேல் ஆகியோர்களுக்கு 27.07.2018 அன்று வழக்கறிஞர்மூலம் கௌரி, லலிதா மற்றும் லஷ்சுமி ஆகிய மூவரும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கு A அட்டவணை சொத்தும் B அட்டவணை சொத்தும் தனம்மாளுடையது என சொல்லியுள்ளார்கள் என்றால் பொய்.

3. சுப்பிரமணியம், வாசு, சிவகுமார், வடிவேல் ஆகியோருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது உண்மை என்றால் சரிதான். அதை என் மனைவியும் அவரது சகோதரிகளும் அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் அனுப்பியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் உள்ள விவரங்களின்படி என் மனைவியும் அவரது சகோதரிகளும்தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றாலும் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய உரிமையே இல்லை என்றாலும் சரியல்ல. நான் B அட்டவணையை வாங்கியுள்ளேன். எனவே வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபருக்கே எந்த உரிமையும் இல்லை என்ற நிலையில் நான் B அட்டவணையை வாங்கியதாக சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் என் மனைவியையும் அவரது சகோதரிகளையும் தரப்பினராக சேர்க்காததால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)